**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No.32/2020 PW .2**

| | |
|---|---|
| பெயர் : ரவி | தந்தை/கணவர் பெயர்: அழகு |
| ஊர் : | தாலுகா : |
| வயது : | தொழில் : |
| ஜாதி : | சமயம் : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of29.04.2026

---

**(1 முதல் 4 எதிரிகள் ஆஜரில்லை. 1 முதல் 4 எதிரிகள் சார்பில் BNSS பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**29.04.2026 முதல் விசாரணை:**

1. நான் தற்போது காளாப்பூரில் குடியிருந்து ரைஸ்மில்லில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகள் ஆவார். எதிரிகளைத் தெரியும். எனது எதிர் வீட்டில் குடியிருப்பவர்கள். நாகராஜ் வீட்டிற்கு பின்புறம் உள்ள பொட்டல் பொது இடத்தை அவர்கள் ஆக்கிரமிப்பு செய்து இருந்தார்கள். அது குறித்து நாங்கள் அவர்களை சத்தம் போட்டோம். இந்நிலையில் கடந்த 25.03.2019ம் தேதி இரவு 7.30 மணியளவில் நான், எனது மனைவி செல்வி, எனது அப்பா அழகு ஆகியோர் எங்கள் வீட்டியில் இருந்த போது மேற்படி விரோதத்தை மனதில் வைத்து கொண்டு எனது மகள் வீதியில் சென்று கொண்டிருந்த போது செல்வம், எனது மகள் தலைமுடியை பிடித்து கன்னத்தில் அறைந்தார். நாகராஜ் கீழே தள்ளிவிட்டு வயிற்றில் மிதித்தார்.

2.எனது மகளுக்கு அறுவை சிகிச்சை செய்து 3 மாதங்கள் தான் ஆகி இருந்தது. இந்நிலையில் இவ்வாறு செய்தார். மலர், பாப்பு ஆகியோர் இரும்பு கம்பியை வைத்து எனது மகள் மீது எறிந்தார்கள். பாப்பும், மலரும் என் மகளை பார்த்து என்றைக்கு இருந்தாலும் உன் சாவு எங்கள் கையில் தான். உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டினார்கள். மேற்படி சண்டையை பார்த்து நான் எனது மனைவி, எனது அப்பா ஆகியோர் சென்று விலக்கிவிட்டு காயம்பட்ட எனது மகள் அம்சாவள்ளியை சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

3. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அரசு மற்றும் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்குரைஞர்களுக்கு முன்பாக சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி.